Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register STC.295/2022
Sessions prosecution
depositions of witness for PW1 cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.07 pm – 1.45pm |
| Name | : | திரு. சந்திரசேகர் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 21th day of October 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

குறுக்கு விசாரணை

1) நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் எழுத, படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள சட்ட அறிவிப்பு மற்றும் புகார் மனுவில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்து தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பணம் வாங்கி விட்டு தரவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது சொந்த அண்ணன் மகள் ஆவார். எதிரியை எனக்கு பிறந்ததில் இருந்தே தெரியும் என்றால் தெரியும். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் தெரியாது. எதிரிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகி விட்டது. எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் முதலில் ஒசூர் ஆவலப்பள்ளியில் குடியிருந்து வந்தார். தற்போது அத்திப்பள்ளிக்கு குடி போய் விட்டார்.

2) நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் வீட்டிலேயே அரிசி வியாபரம் செய்து வருகிறேன். என்ன பெயரில் தொழில் செய்கிறேன் என்றால் Nirmala Retail Rice Shop என்ற பெயரில் கடை வைத்துள்ளேன். மேற்படி தொழில் மூலமாக எனக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் மாதம் ரூ.,40,000/- முதல் 50,000/- வரை வரும். எதிரியின் அப்பா Deputy Thasildhar ஆக இருந்து பணி ஓய்வு பெற்று விட்டார். எனது அண்ணனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பெண்கள், 1 ஆண். கல்யாண்குமார், பிரதீபா மற்றும் எதிரி பிரதீமா ஆகியோர் ஆவார்கள். எதிரி கூட்டு குடும்பமாக இருந்த போது நிறைய சொத்துக்கள் இருந்தது என்றால் அது பற்றி தெரியாது. எனது பெயரில் எதிரியின் அப்பா நிறைய தொழில் செய்து வந்தார். என்ன தொழில் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். 2010 மற்றும் 2015 க்கு பிறகு என் பெயரில் எதிரியின் அப்பா தொழில் எதுவும் செய்வது இல்லை.

3) எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 2018 மார்ச் மாதம் பணம் கொடுத்தேன். தேதி சரியாக தெரியவில்லை. எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.9,00,000/-ம் கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ.9,00,000/-ஐ தொகையாக கொடுத்தேனா என்றால் ஆமாம். என்ன Denomination ல் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டுகளில் ப ணம் கொடுத்தேன். அப்போது 1000, 2000 ரூபாய் நோட்டுகள் இல்லையா என்றால் தெரியவில்லை. அப்போது 2000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருந்ததா என்றால் ஞாபகமில்லை. நான் வங்கியில் இருந்து 500 ரூபாய் நோட்டுகளை எடுத்து வந்து எதிரிக்கு கொடுத்தேன். எந்த வங்கியில் இருந்து பணம் எடுத்தேன் என்றால் SBI Bank Hosur கிளையில் எடுத்தேன். எங்கு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் மூக்கொண்டபள்ளியில் உள்ள எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். எதிரிக்கு பணம் கொடுக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் எதிரி மற்றும் எதிரியின் அப்பா இருந்தார்கள். நான் இருந்தேன்.

4) எதிரி என்ன காரணத்திற்காக பணம் கேட்டார் என்றால் படிப்பு கடன் இருப்பதாகவும், 3 மாதத்தில் திருப்பி கொடுத்து விடுவதாகவும் கேட்டார். பணத்தை எதிரி கேட்டாரா அல்லது எதிரியின் அப்பா கேட்டாரா என்றால் எதிரியின் அப்பா சொன்னார். எதிரி பணம் கேட்டார். நான் எதிரியிடம் தான் பணத்தை கொடுத்தேன். எவ்வளவு வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் வங்கி கட்டணத்தை கட்ட சொல்லி சொன்னேன். ஒரு 4 மாதங்கள் வங்கிக்கான கட்டணத்தை எதிரி செலுத்தினார். என்ன கட்டணம் என்றால்

லோனுக்கான கட்டணம் ஆகும். என்ன லோன் என்றால் வீட்டு லோன் ஆகும். வங்கி கணக்கு அறிக்கை மற்றும் லோனுக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எனது வங்கி கணக்கு நிர்மலா சந்திரசேகர் என்ற பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.3 ஆவணம் தான் 06/11/2019 ல் எனது வழக்கறிஞரை வைத்து நான் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் ஆமாம். அதை படித்து பார்த்தேன் என்றால் ஆமாம்.

5) பு.த.சா.ஆ.3 சட்ட அறிவிப்பில் எதிரி என்னிடம் 21/03/2018 ல் ரூ.15,00,000/-ம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எதிரி என்னிடம் ரூ.15,00,000/-ம் கடன் வாங்கினாரா என்றால் ஆமாம். ஆனால் எனது சட்ட அறிவிப்பில் மற்றும் புகார் மனுவில் நான் எதிரிக்கு ரூ.9,00,000/-ம் கடன் கொடுத்ததாகவும், ரூ.9,00,000/-க்கு எதிரி வழக்கு காசோலை கொடுத்ததாகவும் தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு காசோலையை எதிரி எங்கு வைத்து, எப்போது கொடுத்தார் என்றால் எனது வீட்டில் வைத்து 01/10/2019 ல் கொடுத்தார். எதிரி வழக்கு காசோலையை கொடுக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், எதிரி மற்றும் எதிரியின் அப்பா ஆகியோர் இருந்தோம். வழக்கு காசோலையை எதிரி முழுவதும் பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம். வழக்கு காசோலையில் உள்ள தேதி, பெயர், தொகை, கையொப்பம் ஆகிய விவரங்களை எழுதி பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம்.

6) என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.1 வழக்கு காசோலை தான் எதிரி கொடுத்த காசோலை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பம் ஒரு நிற மையினாலும், இதர விவரங்கள் வேறு ஒரு நிற மையினாலும் உள்ளது என்றால் இல்லை. என் முன்னிலையில் தான் எதிரி எழுதி கொடுத்தார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், வழக்கு காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பம் ஒரு நிற மையினாலும், இதர விவரங்கள் வேறு ஒரு நிற மையினாலும் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியின் கணவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயர் உமாமகேஷ்வர் ராவ். எனக்கும், எதிரியின் கணவருக்கும் கொடுக்கல்,வாங்கல் உள்ளதா என்றால் உள்ளது. என்ன மாதிரியான கொடுக்கல், வாங்கல் உள்ளது என்றால் எப்போதாவது பணம் கேட்டால் பணம் கொடுப்பேன். பிஸ்னஸ் பிடித்து கொடுப்பார். எனக்கும், எதிரியின் கணவருக்கும் இடையே பணம் சம்மந்தமான பரிமாற்றங்கள் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான்.

7) நானும், எதிரியின் கணவரும் ஏதாவது இடத்தை வாங்குவதற்கோ, விற்பதற்கோ ஒப்பந்தம் போட்டுள்ளோமா என்றால் போட்டுள்ளோம். என்னிடம் காட்டப்படும் ஒப்பந்தம் தான் நான் எதிரியின் கணவருடன் செய்து கொண்ட ஒப்பந்தமா என்றால் ஆமாம்.

**29/12/2016 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஒப்பந்தப்படி நான் இடத்தை விற்பதாகவும், எதிரி அதை வாங்குவதாகவும், கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தை வாங்குவதற்கு எதிரியின் கணவர் எவ்வளவு முன் பணம் கொடுத்தார் என்றால் ரூ.5,00,000/-ம் கொடுத்தார். எதிரியின் கணவர் ரூ.5,00,000/-ம் கொடுத்த பிறகு தான் எ.த.சா.ஆ.1 ஒப்பந்தத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் ஆமாம். பாக்கி தொகை எவ்வளவு தர வேண்டுமென்றால் ரூ.7,00,000/-ம் தர வேண்டும். எதிரியின் கணவரை அந்த ரூ.5,00,000/-ஐ திரும்ப பெற்று கொண்டு அசல் கிரைய ஒப்பந்தத்தை என்னிடம் கொடுத்து விட்டார். கிரைய ஒப்பந்தத்தை நான் ரத்து செய்து விட்டேனா என்றால் இல்லை. ரத்து செய்து தருவதாக சொன்னார். ஆனால் ரத்து செய்து தரவில்லை.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துரை நடுவர்
விரைவு நீதிமன்றம்
ஒசூர்.